இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இரவில் நான் கண்ட காட்சியாவது; வானத்தின் மேகங்களின் மீது மானிடமகனைப் போன்ற ஒருவர் தோன்றினார்; இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார்; அவர் திருமுன் கொண்டுவரப்பட்டார். ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன; எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும்; அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும்; அதற்கு முடிவே இராது; அவரது அரசு அழிந்துபோகாது. (தானியேல் *7:13-14*

# தீமையை எதிர்கொள்ள சிறந்த வழி பொறுமையே!



வத்திக்கான்: தாத்தா பாட்டிகளுக்கும் இளையோருக்கும் இடையே பயனுள்ள பரிமாற்றங்கள் வழி, அவர்கள் இணைந்து வளரவும், திருஅவையின் வாழ்வைப் பலப்படுத்தவும் இயலும் என எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோருக்கான திருஅவையின் மூன்றாவது உலக தினத்தையொட்டி வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் ஏறக்குறைய 8000 முதியோருக்கு திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ், அந்நாளின் நற்செய்தி வாசகம் கோடிட்டுக் காட்டும், இணைந்து வளர்தல் என்பதை மையமாக வைத்து தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

தலைமுறை தலைமுறையாக அவரின் இரக்கம், என்ற தலைப்புடன் சிறப்பிக்கப்பட்ட இந்த உலக தினத்தின் நற்செய்தி வாசகம் எடுத்துரைத்த, பயிர்களும் களைகளும், கடுகு விதை, புளிப்புமாவு என்ற மூன்று உவமைகளையும் முன்வைத்து, ஒன்றிணைந்து வளர்தலே இந்த மூன்றிலும் காணப்படுகிறது என்பதை விவரித்தார்.

பயிர்களும் களைகளும் இணைந்தே வளர்வதுபோல், நம் வாழ்விலும் ஒளியும் நிழலும், அன்பும் சுயநலமும், நன்மையும் தீமையும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து, பிரிக்கமுடியாதவைகளாக நமக்கு காட்சித் தருகின்றன எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தீமை என்பது நமக்கு வெளியே மட்டும் இல்லை, நமக்குள்ளேயும் காணப்படுகிறது என்பதை உணர்ந்து அதனை எதிர்கொள்ளவேண்டும் என்ற திருத்தந்தை, தீமைகளைக் காணும்போது அவை குறித்து நாம் பொறுமையை இழக்காமலும், அவற்றைக் களைவதில் வன்முறை வழிகளைக் கையாளாமலும் செயல்பட வேண்டியது அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டினார். தீமையை எதிர்கொள்வதற்கான சிறந்த வழி பொறுமையைக் கடைப்பிடிப்பதே என்பதையும் சுட்டிக் காட்டிய திருத்தந்தை, தீமையை முற்றிலுமாக வெற்றிக்கொள்வது இறைவனின் செயலே என்பதையும் எடுத்துரைத்தார்.

முதியோர் தங்கள் கடந்தகாலத் தவறுகள் குறித்தக் கவலையில் மூழ்கிப்போகாமல், தீர்ப்புகளை இறைவனிடம் விட்டுவிட்டு வாழ்வின் மறையுண்மையை பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இறையரசு எவ்வாறு கடுகுவிதைபோல் இருந்தாலும் பறவைகள் வந்து தங்கும் பெரும் மரமாக வளர்வதுபோல், முதியோரும் தங்கள் முதுமைப் பருவத்தில் மற்றவர்களுக்கு நிழலாகவும் ஆறுதலாகவும் செயல்படமுடியும் எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

தாத்தா பாட்டிகள் எப்போதும் நல்லனவற்றை தங்கள் குழந்தைகளுடனும் பேரக்குழந்தைகளுடனும் பரிமாறிக்கொள்ளும்போது, வாழ்வின் அழகை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவும், உடன்பிறந்த உணர்வுடன் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்பவும் முடிகிறது என மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புளிக்காரத்தை மாவில் கலக்கியபின், அம்மாவு பொங்கி வழிவதைப் பற்றிக் குறிப்பிடும் மூன்றாவது உவமையைக் கையிலெடுத்த திருத்தந்தை, இவ்வகையில் தலைமுறைகளுக்கிடையேயான பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன என்றார்.

தலைமுறைகளுக்கிடையேயான பரிமாற்றங்களுக்கான அழைப்புவிடப்படும்போது, தனியார் நலவாதங்களும், சுயநலப்போக்குகளும் வெற்றிகொள்ளப்பட்டு, முதியோர் கைவிடப்படாமலும், தனிமைக்கு கையளிக்கப்படாமலும் இருக்க உதவுகின்றது என்றார் திருத்தந்தை.

இளையோரும் முதியோரும் தங்களுக்குரிய கொடைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து ஒன்றிணைந்து வாழ உதவும் நோக்கத்தில் ஒருவருக்கொருவர் செவிமடுக்கவும், ஒருவரோடு ஒருவர் உரையாடல் நடத்தவும், ஒருவருக்கொருவர் ஆதரவு வழங்கவும் முன்வர வேண்டும் என்ற விண்ணப்பத்துடன் தன் மறையுரையை நிறைவுச் செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# கூட்டொருங்கியக்க ஆயர்கள் பேரவையில் (Synod) மலேசியர் கருத்துகளும் இடம்பெறும்

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த இறையியலாளர் அருள்தந்தை டாக்டர் கிளரென்ஸ் தாஸ் மற்றும் சண்டக்கான் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அன்னா தெரேசா பீட்டர் அமண்டுஸ் ஆகிய இருவரும் மலேசியாவின் பிரதிநிதிகளாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 16வது பொது ஆயர்கள் பேரவையின் வாக்களிக்கும் உறுப்பினர்களாக தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாகள். இந்த ஆயர்கள் பேரவை எதிர்வரும் அக்டோபர் மாதம் 4-ம் திகதி தொடங்கி 29-ம் திகதி வரை வத்திக்கானில் நடைபெறவுள்ளது.



*அருள்தந்தை டாக்டர் கிளரென்ஸ் தாஸ்*

இந்த ஆண்டு பிப்ரவரியில் பாங்காக்கில் நடைபெற்ற சினோடலிட்டி எனும் கூட்டொருங்கியக்கம் தொடர்பான ஆசிய கண்ட பேரவையின் இறுதி ஆவணத் தயாரிப்புக் குழுவில் பணியாற்றிய ஆசிய பகுத்தறிவு மற்றும் எழுத்து படைப்புக் குழுவில் அருள்தந்தை கிளாரன்ஸ் உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்படத்தக்கது. இந்த அனுபவத்தின் பேரில் அதே பணியைத் தொடர இருவரும் வந்திக்கானுக்குச் செல்லவுள்ளனர்.

ஆயர் அல்லாதவர்களும், பொதுநிலையினரும் முதல்முறையாகக் கலந்துகொண்டு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கும் இந்த ஆயர் பேரவையை 'ஒரு தனித் தன்மை' கொண்டது என்றும், உலகளாவிய திருஅவையின் பொதுக் கண்ணோட்டத்தைப் பெறுவதற்கான வாய்ப்பாக இந்த அனுபவத்தை அருள்தந்தை கிளாரன்ஸ் பார்ப்பதாக விவரித்தார்.

"பல சமயங்களில் திருஅவை என்பது நமது சொந்த பங்கு அல்லது மறைமாவட்டமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் வெவ்வேறு நாடுகளின் அறிக்கைகளைப் படிக்கவோ அல்லது கேட்கவோ வாய்ப்பு கிடைக்கும்போது அவற்றை வாசிப்போமானால், நமது சிந்தனை மாற்றம் பெறும். இதற்கு நமது கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று மேலும் கருத்துரைத்தார்.

"நாம் நடத்திய ஆசிய மற்றும் மலேசிய கலந்துரையாடல்களில் இந்த கூட்டு ஒருங்கியங்க ஒன்றுகூடல்களில் இம்மண்ணின் கத்தோலிக்கச் சமூகங்கள் பகிர்ந்து கொண்டதை நாம் அறிந்திருக்கும் வேளையில், வத்திக்கானில் ஒன்றுகூடும் தருணத்தில், உலகளாவிய கத்தோலிக்க மக்களின் எண்ணத்தையும் பிரச்சனைகளையும், சவால்களையும் நான் கேட்க விரும்புகிறேன்," என்று மாமறைமாவட்டத்தின் அலுவலகப் பொறுப்பாளருமாகிய அருள்தந்தை கிளாரன்ஸ் மேலும் கூறினார்.

ஆயினும்கூட, அருள்தந்தை கிளரென்ஸ் அவர்கள் நடைபெறுள்ள இந்த கூட்டு ஒருங்கியங்க செயல்பாட்டில் தனது நம்பிக்கைக் கொண்டுள்ளார் என்றும்

*(தொடர்ச்சி, அடுத்தப்பக்கம்)*

## கூட்டொருங்கியக்க பேரவையில் (Synod) மலேசியர் பகிர்வும் கேட்கப்படவுள்ளது

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

இந்த பேரவை சரியான திசையில் முன்னோக்கி நகர்த்துவதற்கு தூய ஆவியானவர் கூட்டாக திருஅவையை வழிநடத்துவார் என்று உறுதியாக நம்பு



*அன்னா தெரேசா பீட்டர்*

வதாகவும் கூறினார்.

"இது நாம் நம்ப வேண்டிய ஒரு செயல்முறை என்பதை புரிந்துகொள்வதே சவாலாகும். நாம் தூய ஆவியானவரை நம்ப வேண்டும், நாம் கடவுளை நம்ப வேண்டும், இல்லையெனில் நம் கருத்துக்களும் இங்கே பகிரப்படாவிட்டால் நாம் நிச்சயமாக ஏமாற்றமடைவோம் என்றும் தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார் அருள்தந்தை டாக்டர் கிளரென்ஸ் தாஸ்.

நிறைவாக, மேற்கண்ட 16வது ஆயர்கள் பொதுப் பேரவையில் சிங்கப்பூர் கர்தினால் வில்லியம் கோ அவர்களுடன் டாக்டர் கிளரென்ஸ் தாஸ் மற்றும் அன்னா தெரேசா பீட்டர் ஆகியோரும் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

அக்டோபர் மாதம் வத்திக்கானில் கூட உள்ள இந்த பேரவையின் கண்டுபிடிப்புகள், பின்னர் ஒருநாள் அதிகாரப்பூர்வ ஆவணமாக வெளிவரும்.

## ரவாங், புனித யூதா ததேயு பங்கில் 'திருப்பலி வாழ்வின் ஊற்று' தலைப்பில் பயிற்சி நடைபெற்றது

ரவாங்: கடந்த ஜூலை திங்கள் 23-ஆம் திகதி, ஞாயிறன்று இங்குள்ள புனித யூதா ததேயு பங்கில், திருப்பலி வாழ்வின் ஊற்று' எனும் தலைப்பில் திருவழிபாட்டு பயிற்சி ஒன்று நடை



பெற்றது. அன்று மாலை 6 மணி முதல் இரவு 9.00 மணிவரை நடைபெற்ற இப்பயிற்சியை சகோ. ஆர்.கே.சாமி அவர்கள் வழிநடத்தினார்.

தொடக்கமாக, பங்குத்தந்தை அருள்பணி வின்சண்ட் தோமஸ் அவர்கள் பயிற்சிக்கு வந்திருந்தோரை வரவேற்று அப்பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, பயிற்சியை வழிநடத்திய சகோ. ஆர்.கே.சாமி திருவழிப்பாட்டின் உட்பிரிவுகளையும் அவற்றின் மேன்மையையும் ஒவ்வொன்றாக விளக்கினார்.

குறிப்பாக, இரண்டாம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்தும் நான்கு முக்கிய அம்சங்களான, 'இயேசுவே திருவழிபாட்டின் மையம், திருவழிபாட்டுக் கொண்டாட்டத்திற்கு ஆயர், அருள் பணியாளர் அல்லது திருத்தொண்டர் ஆகியோரின் அவசியம், இறைமக்களின் முழுமையான பங்கேற்பு மற்றும் நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் உச்சமும் ஊற்றுமாக உள்ளது என்பனவற்றை தெளிவுப்படுத்தினார்.

மேலும், திருப்பலியின் போது பங்கு மக்கள் பின்பற்றும் சில தவறான செய்கை முறைகளையும் சுட்டிக்காட்டனார்.

அடுத்து, பங்கேற்றவர்களின் கேள்விக



ளுக்கும் சந்தேகங்களுக்கும் சிறந்த முறையில் விடையளித்தார்.

நிறைவாக, அருள்தந்தை வின்செண் தோமஸ் அவர்களின் ஆசீரோடு பயிற்சி ஒரு நிறைவை எய்தியது.

-தோமஸ் மரியதாஸ்.

## மணிப்பூர் வன்முறைக்கு இந்திய அரசியல் தலைவர்கள் கண்டனம்

**வத்திக்கான்** மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்று வரும் வன்முறையின் உச்சமாக பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட காணொளி இந்தியா முழுதும் பரவி தாக்கத்தை ஏற்படுத்தி




வரும் நிலையில் பல்வேறு தரப்பினர் மற்றும் அரசியல் தலைவர்கள் தங்களது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

மணிப்பூர் பழங்குடியின பெண்கள் மீதான வன்முறை வெறிச்செயல் மனிதாபிமானமற்றது என்றும், குற்றவாளிகள் தப்பிக்க முடியாதவாறு விசாரணை நடத்த முயற்சித்து வருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இராணி.

மேலும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறுகையில் "மணிப்பூரில் மனிதம் மாண்டுவிட்டது ஜனநாயகத்தையும், சட்டத்தையும் வன்முறை வெறிச்செயலாக அரசு மாற்றி உள்ளது என்றும் கண்டித்துள்ளார்.

அரசியல் தலைவர்களின் அமைதி மற்றும் செயலற்றத் தன்மைதான் மணிப்பூரை இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்றும், மணிப்பூர் மக்களுடன் ஒன்றிணைந்து நின்று அமைதி ஒன்றை மட்டுமே முன்னோக்கிச் செல்லும் வழியாகக் கொண்டு செயல் படுவோம் என்றும் தெரிவித்துள்ளார் முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி.

மணிப்பூரில் மெய்தி மற்றும் குக்கி இன மக்களுக்கிடையே கடந்த மே 3-ம் தேதி தொடங்கிய மோதல் ஏறக்குறைய 2 மாதங்களுக்கும் மேலாக நீடித்து இதுவரை 142 பேர் உயிரிழந்துள்ளனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 65,000 பேர் வீடுகளை இழந்து அகதிகளாகி உள்ளனர்.

**உலக இளையோர் தினத்திற்கு நமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.**




## இறைவனின் பூரிப்பில் நாமும் பங்குபெறுவோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 18ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நாம் ஆண்டவரின் தோற்றமாற்ற விழாவை கொண்டாடும் அதே வேளையில் இயேசுவின் குரலுக்கு செவிமடுத்து வாழ்கின்றோமா என சிந்திக்க அழைக்கப் படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் வானத்தின் மேகங்களின்மீது மானிடமகனைப் போன்ற ஒருவர் தோன்றினார்; "அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும்; அதற்கு முடிவே இராது; அவரது அரசு அழிந்துபோகாது" என்று வாசிக்கின்றோம். ஆகவே, இயேசு விண்ணகத்தில் எப்படி இருப்பார் என்பதையும் அவர் எப்படி அரசாள்வார் என்பதையும் இதன் வழி நாம் புரிந்து கொள்ளலாம்.

பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து அதை அழகாக உறுதிபடுத்துகிறார், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் பற்றி "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று மாட்சிமிகு விண்ணகத்திலிருந்து அவரைப் பற்றிய குரல் ஒலித்தபோது, தந்தையாகிய கடவுளிடமிருந்து மதிப்பும் மாட்சியும் பெற்றார்" என்றும் தூய மலையில் அவரோடு இருந்தபோது விண்ணகத்திலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம்" என்றும் சொல்கிறார்.

இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவைப் பார்த்து, "இவரே என்னுடைய அன்பார்ந்த மைந்தன். இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலிக்கிறது. இயேசு கிறிஸ்து எப்போதும் தந்தையின் திருவுளம் என்ன? அவருடைய மீட்புத் திட்டம் என்ன? என எல்லாவற்றையும் உணர்ந்து, அதன்படி தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தார். அதனால்தான் கடவுளிடமிருந்து இப்படிப்பட்ட ஒரு பாராட்டைப் பெறுகிறார்.

இயேசுவின் உருமாற்ற நிகழ்வில் மோசேயும் எலியாவும் தோன்றியதன் அர்த்தம் என்ன என்பதும் நம்முடைய சிந்தனைக்குரியதாக இருக்கின்றது. அதற்கு விவிலிய அறிஞர்கள் சொல்லக்கூடிய காரணங்களில் முதலாவது, இயேசு வாழ்ந்த காலத்தில் அவரை சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் எனவும் நினைத்தார்கள் (மத் 16:14). இத்தகைய குழப்பங்களைத் தெளிவுபடுத்தவும், இயேசு, தான் ஓர் இறைவாக்கினர் மட்டுமல்ல, இறைவாக்கினர்களுக்கு எல்லாம் மேலான இறைவன் என்பது இந்த நிகழ்வின் வழியாகத் தெளிவாகின்றது. இரண்டாவது, இயேசுவின் மீது எப்போதும் 'மூதாதையர்களின் சட்டங்களை மீறுகின்றார்' என்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டே வந்தது. ஆனால் இந்த உருமாற்ற நிகழ்வில் திருச்சட்டத்தை வழங்கிய மோசேயும் பெரிய இறைவாக்கினராகிய எலியாவும் வருவதால், இயேசு திருச்சட்டத்தையும், இறைவாக்கினையும் அழிக்க அல்ல, மாறாக அதனை நிறைவேற்ற வந்திருக்கிறார் என்ற உண்மையை வெளிப்படுத்தபடுகின்றது (மத் 5:17). எனவே, இயேசுவின் உருமாற்றப் பெருவிழாவில், இயேசுவே இறைமகன் என நாம் ஏற்றுக்கொண்டு அவருக்கு செவிமடுத்து வாழ, துன்பங்களைத் துணிவோடு ஏற்றுக்கொள்ள தீர்மானம் எடுப்போம். அதன்படி வாழ முயல்வோம். இந்த மண்ணுலகிற்கு உப்பாக, ஒளியாக மாறுவோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**ஆண்டவரின் தோற்றமாற்றம்**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தானி 7: 9-10, 13-1 |
| பதி.பாடல் | 97: 1-2. 5-6. 9 |
| 2வது வாசகம் | 2 பேதுரு 1: 16-19 |
| நற்செய்தி | மத்தேயு 17: 1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**